யா நூர்.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

அஹ்காமுத் தஹ்லீக்

என்னும்

க்ஷவரத்தைப்பற்றியமார்க்கவிதிகள்

இஃது

திண்டுக்கல் தாலூக்கா பிலாத்து கிராமம்

புலவர். நூர். இஸ்மாயில் சாஹிப் அவர்களின்

குமாரர்,

பி. என். செய்யத் அலி நூரி சாஹிப்,

அவர்களாலியற்றப்பட்டு,

கோயமுத்தூர் விக்டோரியா பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1925. அணா 4.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-OCT 1925
MADRAS

Q7
N25
181993

யா நூர்.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

அஹ்காமுத்தஹ்லீக்.

முகவுரை.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம். அல்ஹம்து லில்லாஹில்லதீ கலக்கல் இன்சான பிஅஹ்ஸனி சூரத்தின் அலிய்யா: வஅஹ்லாஹு பிஉலூமித்தீனில் முபீநத்தில் கவிய்யா: வஅஃதாஹு பிஇர்பானிஹி அதில்லதன் ஜலிய்யா:. வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரசூலிஹில் ஹாதி இலத்தரீக்கில் முஸ்தகீமி பில்மில்லத்தில் ஹனீபிய்யா: வஅலா ஆலிஹி வஅஸ்ஹாபிஹில் முஜ்தஹிதீன பிஸாஹ்பத்தி காதிமுன்னபிய்யில் குறைஷிய்யா: வத்தாபிஈன லஹும் பிஇஹ்சானிர்ரஹ்மானிய்யா: அஜ்மஈன்.

புகழுடங்கலும் சர்வவல்லமையுள்ள சாக்ஷாத்தி கடவுளாகிய பாக்பர்வர்திகாரென்னும் சுத்தசைதன்யம் பொருந்திய மாலிகுல் முலூக்காகிய அல்லாஹ்ஜல்லஷானஹூவத ஆலாவுக்காயிருக்கும். இன்னும் சலாத்தென்னும் கருணையும் சலாமென்னும் ஈடேற்றமும் உலககாரணரும் உலகாரக்ஷகருமான சர்வரேகாயினாத், மூபக்கரே மௌஜூதாத் செய்யத் நபி அரபி, முஹம்மதுமுஸ்தபா ரசூல் சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்பேரிலும், அவர்களின் பந்துமித்திரர்கள்பேரிலும், மற்றும் முஃமினீன்கள்பேரிலும் உண்டாவதாகவும். ஆமீன்.

அறிந்துகொள்ளுங்கள். எனதரிய சகோதரர்களே! தற்காலங்களில் மிகுதமான முஸ்லீம் ஜனங்களும் நமது சிறப்பாகிய

இஸ்லாமென்னும் தீனின் சட்டங்களையுற்றுணர்ந்து பாரர்மலும், அதன்படி நடவாமலும், மேனாட்டாரின் வழக்கத்தையனுசரித்து தலையில் கிராப்பு வைப்பதும், தாடியைச்சிரைப்பதும், மீசையைக் கணக்குக்கு மீறி அதிகமாகவளர்ப்பதும் இன்னும் இவைபோன்ற பற்பல கருமங்களையும் வழக்கமாகக்கொண்டு வருகிறார்கள். இவை களெல்லாம் மார்க்க சட்டங்களுக்கு விரோதமானவையென்றும் அவ்விதம் செய்துவருவதால் ஒருவன் மறுமையில் மிகவும் துன் பத்துக்காளாவானென்றும் அநேக ஹதீதுகளினால் தெரியவருகி றது. உதாரணமாக "எவனொருவன் ஒரு காபிரான கூட்டத்தை நடையுடைபாவனைகளில் ஒப்பாகிறானோ, அவனும் அக்கூட்டத்தி லொருவனாக எண்ணப்படு"மென்று நமது நாயகம் சர்வலோகாயி னாத் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் திருவுளமானதாக ஹதீதுஷரீபில் வருகிறது. அவ்விதம் ஒப்பாகிறவன் கியாமத்து நாளில் எந்தக்கூட்டத்தாரை ஒப்பானானோ அந்தக் கூட்டத்தினி டையே எழுப்பப்படுவானென்றும் அக்கூட்டத்தாருக்கு விதிக்கப் படும் தண்டனை இவனுக்கும் விதிக்கப்படுமென்றும் இந்த ஹதீ தினால் தெரியவருகிறது. ஆகையால் முஸ்லீமான ஜனங்கள் ஈடேற்றம் பெறநாடுவார்களேயானால், அவர்கள் காபிரானஜனங் களின் நடவடிக்கைகளையும் வழக்கங்களையும் விட்டுவிட்டு நமது ரசூலேகரீம் (சல்) அவர்களும் அவர்களுடைய அஸ்ஹாபுகளும் எவ்விதம் நடந்துவந்தார்களோ அதையறிந்து பின் பற்றிபொழு கவேண்டும்.

இன்னும் ஆண்டவன் ஹக்சுப்ஹானஹுவதஆலா குர்ஆன் ஷரீபில் "முஹம்மதே நீர்சொல்லும், எவனொருவன் அல்லாஹு தஆலாவைப்பிரியம் வைக்க நாடுகிறானோ, அவன் என்னை (ரசூலே அக்ரம் (சல்) அவர்களை) துயர்ந்துகொள்ளட்டும். அப்படியவன் துயர்வானேயானால் அல்லாஹுதஆலா அவன்பேரில் பிரியம் வைத்து அவன் பாவங்களையும் பொறுப்பான். அல்லாஹுதஆலா பிழை பொறுக்கிறவனும் கிருபை செய்கிறவனுமாயிருக்கும்."

என்று திருவுளமாயிருக்கிறான். ஆகவே, எவனொருவன் தாஹர் நபி (சல்) அவர்களுக்கு வழிப்படவில்லையோ, அவனுக்கு ஈடேற்றமில்லையென்று இதனால் தெரியவருகிறது. ஆகையால் முஸ்லீம் ஜனங்களிலொவ்வொருவரும் ஹபீபேகுதா (சல்) அவர்களின் சுன்னத்துகளையெடுத்து நடப்பது மிகவும் சிறந்ததாகவும் ஆண்டவனுடைய பிரியத்துக்குக் காரணமாகவும் இருக்கும் அவ்வாறன்றி ஒருவன் நபி நாயகம் (சல்) அவர்களின் கட்டளைக்கும் சுன்னத்துக்கும் விரோதமாகத் தலைமயிரை அரைகுறையாய் வெட்டியும் தாடியைச் சிறைத்தும் மீசைகளைக்கணக்குப்படி வெட்டாமலுமிருந்து ஆண்டவனுடையவும், அவனுடைய ரசூலுடையவும் வெறுப்புக்குப் பாத்திரமாவானேயானால், அவனுடைய புகலிடமெங்கே? மறுமையில் அவன் எவ்விதம் ஈடேற்றம் அடைவான்? இவ்விஷயங்களை அரிய நேசர்கள் கவனிப்பார்களாக.

ஆகையால், தற்காலங்களில் பேனாட்டு நாகரீகத்தால் மயங்கி உடையுடை பழக்கவழக்கங்களில் எஹூதி நஸாரா முஷ்ரிக்கீன்களாகிய காபிர்களையொப்பாகி நடைக்கும் முஸ்லிம் ஜனங்களுக்கு நல்வழியைக்காட்டும் பொருட்டும், ஆண்டவனுடைய எலையெடுத்து விலகலைத்தவிழ்ந்துகொள்ளவேண்டும் என்னும் நல்லெண்ணமுடைய முஸ்லீம் சகோதரர்களில் கல்வியறிவில்லாமையால் சிற்சில விஷயங்களில் சிறப்பாகிய சுன்னத்தை விட்டும் பிசகிநடக்கும் சிலருக்கு நமது நாயகம் செய்யிதில் முர்ஸலீன் (சல்) அவர்களும் அவர்களின் சஹாபாக்களும் எவ்விதம் செய்து வந்தார்கள் என்றும் இருலோகங்களிலும் ஈடேற்றமடையவேண்டுமானால் நாம் எவ்விதம் செய்யவேண்டும் என்றும் காட்டும் பொருட்டும் இச்சிறு கிதாபைக்கோர்வை செய்து இதற்கு **அஹ்காமுத்தஹ்லீக்** என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. பிழையென்பது மனிதர்க்கியல்பாதலால், இதில் சொற்பிழை பொருட் பிழைகளிருப்பினும் திருத்திக்கொண்டு எமது ஹக்கில் துஆ செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இச்சிறு கிதாபை பிழைகள் பார்த்துத் திருத்திக்கொடுத்த எனதரிய நண்பர் வக்கீல், கனம். சு. ப. முஹம்மது இப்ராஹீம் சாஹிப் B.A., B.L. அவர்களுக்கு எனது அன்பார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

பி. நூ. செ.

786

யா நூர்.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

அஹ்காமுத்தஹ்லீக்

---

1. தலைரோமங்களின் பயான்.

---

1. **தலையின் ஹத்து.** ஒருவனுக்கு ஒஸூ பூர்த்தியாகவேண்டுமானால் தலையின் ஹத்து என்னும் வரம்பையறியவேண்டியது அவசியமாக இருக்கிறது. எவ்விதமென்றால், ஹனபிமத்ஹபின்படி தலைக்குமஸ்ஹூச்செய்கிற ஒருவன் சரியாகத்தலையில் நாலிலொரு பாகத்தை மஸ்ஹூச்செய்வது அவசியமாயிருப்பதால் தலைரோமத்தின் அளவைத்தெரியாமல் நாலிலொரு பாகத்துக்குக்கம்மியாக மஸஹூச்செய்வானேயானால், அவனுடைய ஒஸூ பூர்த்தியாகாது. எப்போது ஒஸூ நிறப்பமாக வில்லையோ, அப்போது தொழுகையும் நிறப்பமாகாது. ஆகையால், தொழுகை நிறப்பமாக வேண்டுமானால் ஒவ்வொரு உருப்புகளின் ஹத்தும், முக்கியமாகத்தலையின் ஹத்து திட்டமாகத் தெரியவேண்டியது அவசியமாகிறது. ஆகையால் தலையின் ஹத்தின் விஷயமாக பிக்ஹூடைய உலமாக்கள் எழுதியிருப்பதைக்கொஞ்சம் பயான் செய்வது அவசியமாகிறது.

மிகுதமான பிக்ஹூ கிதாபுகளிலும் நெற்றிக்கு மேல் பாகத்தில் மயிர்முளைக்கும் தானத்திலிருந்து தலைரோமம் ஆரம்பமாகிறதென்று எழுதியிருக்கிறார்கள். ஆனால் மேலே, மயிர்முளைக்கும்

தானம் என்றது மிகுதமான ஜனங்களுக்கும் நெற்றிக்கு மேல் முடிமுளைக்கும் இடமென்றே பொருள் படுத்தவேண்டும். ஏனென்றால், சிற்சிலஜனங்களுக்கு இயற்கையாகப்பிறப்பிலிருந்தோ, அல்லது இடையில் வியாதி, வயோதிகம் முதலியவைகளைக்கொண்டோ, முன்னெற்றிமுதல் உச்சிவரையிலோ அல்லது அதற்கதிகமாகவோ, தலைவழுக்கையாய்விடுகிறது. இதைக்கொண்டே அவர்களுக்குத்தலையின் ஹத்து உச்சியிலிருந்து ஆரம்பமாகிறதென்று எடுத்துக் கொள்ளக்கூடாது. இன்னும் இதைப்போலவே சிலருக்கு வழக்கமாகமுடி முளைக்கும் தானத்துக்குக்கீழ் நெற்றியிலும் முடிமுளைத்திருப்பதைக்கொண்டு தலையின் ஹத்தில் நெற்றியில் கொஞ்சமும் சேருகிறதென்று எண்ணிக்கொள்ளக்கூடாது. அவ்விதம் நெற்றியில் முளைக்கும் ரோமம் முகரோமத்துக்சேர்ந்ததென்றும் தலைரோமத்துக்குச்சேராதென்றும் எழுதப்பட்டுவருகிறது. ஆகவே, தலைரோமத்தின் முன்புறத்தில் ஹத்தாகிறது, நெற்றிக்கு மேல் மிகுதமானஜனங்களுக்கும் வழக்கமாக முடிமுளைக்கும் தானத்திலிருந்தாயிருக்கும்.

இனி, நெற்றிக்கிருபுறமும் இருக்கும் மயிரானது தலைரோமத்தைச்சேர்ந்ததென்று ''மின்ஹாஜ்'' முதலிய கிதாபுகளில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் ஒஸூவில் முகம்கழுகும்போது இவ்விருபுறமிருக்கும் முடிகளையும் கழுகுவது அவசியமில்லையென்று ஏற்படுகிறது. இனி, மேலே சொல்லப்பட்ட நெற்றிக்கு இருபுறமுமிருக்கும் தலைரோமத்தைச்சேர்ந்தமுடியும் தாடிரோமமும் எந்தத்தானத்தில் சந்திக்கின்றது என்றவிஷயமாகச் சொல்லும் பொழுது, கண்களுக்கும் காதுகளுக்குமிடையிலிருக்கும் ஓர் உயரமான எலும்பின் மேல் பாகம் நுனியே இத்தானமாயிருக்கும். அதற்குமேல் பாகத்திலுள்ளது தலைரோமத்துக்குச் சேர்ந்ததென்றும் கீழ்பாகத்திலுள்ளது தாடிக்குச்சேர்ந்ததென்றும் ''ஹஸனத் துர்ரிவாயத்து'' என்றகிதாபில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் தலைமுடியைச்சிறைக்கும் பொழுது, மேற்சொன்ன தானம் வரையில் சிறைக்கவேண்டும் என்றும் தாடிவளர்ப்பதும் அந்தத்

தானம் முதற்கொண்டே வளர்க்கவேண்டும் என்றும் இதனால் விளங்குகிறது. இவ்விதமாகவே அப்துல்லாஹ் இப்னுஉமர் ரலியல்லாஹுஅன்ஹு அவர்களும் நாவிதர்களுக்கு மேற்சொன்ன தானம் வரையில் சிறைக்கவேண்டுமென்று உத்தரவு செய்ததாக ரிவாயத்து செய்யப்பட்டு வருகிறது. இக்காலத்திலுள்ள சிலஜனங்கள் மேலே சொல்லப்பட்ட விதிகளைக் கவனிக்காமல் நடந்துவருகிறார்கள். இவ்விஷயத்தில் முஸ்லீம் சகோதரர்கள் கவனத்தைச் செலுத்தி நல்வழிப்படுவார்களாக.

இனி பின்புறத்தில் தலையின் ஹத்தாகிறது, பிடரிக்கு மேல் முடி முளைக்கும் தானம் முதற்கொண்டாயிருக்கும். பிடரி தலையின் ஹத்துக்குச்சேர்ந்ததல்ல. ஆகையால் தலைக்கு மஸஹு செய்யும் போது பிடரியை மஸஹு செய்யவேண்டிய அவசியமில்லை.

ஆகவே, மேலே சொல்லப்பட்ட ஹத்துக்குள்பட்டதே தலை ரோமமென்றும், தலை ரோமத்தைப்பற்றிய எல்லா மஸ்அலாக்களும் மேலே சொல்லப்பட்ட ஹத்துக்குள்ளிருக்கும் எல்லா ரோமங்களுக்கும் பொருந்துமென்றும் இதனால் தெரிகிறது.

2. **ஆண்பிள்ளைகள் தலையில் மயிர்வளர்ப்பதன் பயான்.** ஆண்பிள்ளைகள் தலையில்மயிர் வளர்ப்பது சுன்னத்தாயிருக்கும். நபி நாயகம் (சல்) அவர்கள் நாலு தடவைகளைத்தவிர மற்றகாலமெல்லாம் தங்களின் சிறப்பான தலையில் முடிவளர்த்தி வந்தவர்களாக இருந்தார்களென்று "மவாஹிபு" என்றகிதாபில் வருகிறது. இன்னும் றசூலே அக்ரம் (சல்) அவர்கள் தங்களுடைய ஆயுளில் நாலுதடவைகளே தங்களுடைய முபாரக்கான தலை முடியைச்சிறைக்கும்படி செய்தார்களென்றும் அந்த நாலு தடவைகளுமாகிறது (1) உம்ரத்துல் கலா. (2) பத்ஹுமக்கா. (3) உம்ரயேஜுஃறானா (4) ஹஜ்ஜத்துல் விதாஃ ஆகிய இவைகளாயிருக்குமென்றும் "சாதுல் முஆது" என்றகிதாபில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் மிகுதமான சஹாபாக்களும் தலை

முடியை வளர்ப்பவர்களாகவே இருந்தார்கள் என்று தெரிகிறது. ஆகவே, தலைமுடிவளர்ப்பது ஆண்பிள்ளைகளுக்கு சுன்னத்தா யிருக்கும்

இனி நபிபெருமானார் (சல்) அவர்களும் மிகுதமான சஹாபாக் களும் தலைமுடியை வளர்ப்பவர்களாக இருந்தார்கள் என்பதைக் கொண்டு தலைமுடியைச்சிரைப்பது ஜாய்சல்லவென்றாவது விலக் கப்பட்டது என்றாவது எண்ணிவிடக்கூடாது. தலைமுடியைச் சிரைப்பது முபாஹ் என்னும் ஆகுமானதாயிருக்குமென்று மிகு தமான உலமாக்களும் எழுதியிருக்கிறார்கள். இன்னும் அலி (ரலி) அவர்களும் சில சஹாபாக்களும் தலைமுடியைச்சிரைப்பித்து வந் திருக்கிறார்கள். தலைமுடியை சிரைப்பது ஜாய்சல்லவென்றிருக்கு மானால், அலி (ரலி) போற்கொத்தசிறந்த மேதாவிகளான சஹா பாக்கள் தலைமுடியை சிரைப்பித்தவர்களாக இருந்திருக்கமாட் டார்கள். இதையனுசரித்து மிகுதமான உலமாக்களும் தலைரோ மத்தைச் சிரைப்பது ஜாய்சாயிருக்குமென்று சொல்லியிருக்கி றார்கள்.

இனி நபி பெருமான் (சல்) அவர்களும், மிகுதமான சஹா பாக்களும் தலைமுடியைவளர்த்தவர்களாயிருக்க, அலி (ரலி) அவர் களும் மற்றும் சில சஹாபாக்களும் ஏன் தலைமுடியை சிரைப்பித் தவர்களாக விருந்தார்களென்று யாராவது கேட்கக்கூடும். இதற் குக்காரணம் என்னவென்றால்: றசூலே அக்ரம் (சல்) அவர்கள் ஒருநாள் முழுக்குடைய பயானைப்பற்றி சொல்லிக்கொண்டுவரும் போது "எவனொருவன் முழுக்கு நீக்குவதற்காகக் குளிக்கும் பொழுது ஒருரோமக்காலளவு தண்ணீர் செல்லாமலிருந்தானால் அவனுக்கு முழுக்கு நீங்காது. அவனைகப்றிலும் கியாமத்து நா ளிலும் கடுமையாக அதாபு செய்யப்படும்" என்று திருவுளமா னார்கள். இதைக்கேட்டு அலி (ரலி) அவர்கள் பேணுதலுக்காகத் தலைமுடியைச் சிரைப்பித்தவர்களாக இருந்தார்களென்று சொல் லப்பட்டு வருகிறது.

இனி, தலைமுடியை வளர்க்க ஒருவன் நாடுவானேயானால் அவன் சிற்சில விஷயங்களை முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

முதலாவது, தலைமுடி வளர்க்கின்ற ஒவ்வொருவரும் அடிக்கடி அதற்கு எண்ணை தடவி சீப்பு முதலியவைகளைக்கொண்டு சீவிவிடவேண்டும். இவ்விதம்செய்தால்தான் அவனுக்கு சுன்னத்தின் தவாபுகிடைக்கும். இதற்குமாறாக தலையில் முடிவளர்த்து, அதற்கு எண்ணை தடவாமலும் சீவாமலும் முடியை அலங்கோல நிலைமையில் வைத்திருப்பது மக்ரூஹென்றும் அவ்விதமிருப்பதைவிட தலைரோமத்தைச்சிறைத்து வருவதே மிகவும் சிறந்ததென்றும் "மதாரிஜின்னுபுவ்வா" முதலிய பிக்ஹு கிதாபுகளில் எழுதப்பட்டு வருகிறது. இன்னும் றசூல் (சல்) அவர்களின் திருச்சமுகத்தில் ஓர் மனிதர் தலைமயிரைச்சீவாமலும் எண்ணை முதலியவைகளைத்தடவாமலும் தலைமுடியை அலங்கோல நிலைமையில் வைத்துக்கொண்டு வந்தார். நபி பெருமான் (சல்) அவர்கள் அவருடன் பேசாமல் முகத்தைத்திருப்பிக்கொண்டார்கள். இதன் காரணம், தன் தலைமுடியை அலங்கோல நிலைமையில் வைத்திருந்ததென்று அம்மனிதன் கண்டு திரும்பிப்போய் தலைக்கு எண்ணை தடவி சீவிக்கொண்டுவந்தார். அப்போது ஹாமீம் நபி (சல்) அவர்கள் அவருடன் மிருதுவாகவும் சந்தோஷமாகவும் பேசினார்கள். இன்னும் தலைமயிரை அடிக்கடி சீவி ஒழுங்குபடுத்தவேண்டும் என்று தாக்கீதும் செய்தார்கள். ஆகையால், தலையில் மயிர் வளர்க்கும் ஒவ்வொருவரும் மேற்சொன்ன ஹதீதை கவனித்து அடிக்கடி தலைக்கு எண்ணைபோட்டு மயிரைச்சீராக வைப்பது அவசியமாயிருக்கும்.

இரண்டாவது ஒருவன் சர்வரே ஆலம் நபி(சல்) அவர்களின் சுன்னத்தை நாடாமல் வீண் அழகையுத்தேசித்துத்தலையில் முடி வளர்த்து சிங்காரிப்பானேயானால், அதனால் அவனுக்கு சுன்னத்துடைய தவாபு கிடைக்காது. அதற்கு மாறாக கியாமத்து நாளில் அதன் காரணத்தைக்கொண்டு அவனுக்கு அதாபுண்டாகும் என்று வந்திருக்கிறது.

மூன்றாவது. தலை மயிரை ஆண்பிள்ளைகள் தோள்களுக்குக் கீழ் தொங்கும்படியாக வளர்த்தக்கூடாது. அவ்விதம் பெண்களைப்போல் தோள்களுக்குக்கீழ் தொங்கும்படியாக ஆண்பிள்ளைகள் முடி வளர்ப்பது ஜாய்ஸாகாதென்று வந்திருக்கிறது. ஏனென்றால் அவ்விதம் செய்வதால் பெண்களை யொப்பாகிறதென்னும் குற்றம் ஏற்படுகிறது. இனி செய்யிதுல் முர்ஸலீன் நபி (சல்) அவர்கள் தங்களுடைய முபாரக்கான தலைமுடியை இருகாதுகளின்நடுவேவறையில் வளர்த்து வந்தார்களென்று ஒருரிவாயத்து வந்திருக்கிறது. இன்னுமோர் ரிவாயத்தில் நபிபெருமான் (சல்) அவர்களின் தலைமுடியானது காதுகளின் கீழ் அருகுவறையில் வளர்ந்திருந்ததென்று சொல்லப்படுகிறது. மற்றுமோர் ரிவாயத்துப்படி அவர்களின் தலைமுடி தோள்களைத்தொட்டுக்கொண்டிருந்ததென்று வந்திருக்கிறது. இவ்விதம் ரிவாயத்துகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக வந்ததன் காரணம் என்னவென்றால்: றசூலேகரீம் (சல்) அவர்களின் தலைமுடி நடுக்காது வரையில் வளர்ந்திருந்ததென்று சொன்னராவிகள் ஹபீபேகுதா (சல்) அவர்கள் தலைமயிரைவெட்டிய சிறிதுநாளில் பார்த்திருக்கவேண்டும். அப்போது முடியானது இருகாதுகளின் நடுவரையிலேயே வளர்ந்திருப்பதைக்கண்டு அவ்விதம் எழுதியிருக்கவேண்டும். இவ்விதமே தாஹா நபி (சல்) அவர்கள் மயிர்கத்தரித்து அதிக நாளானபின் பார்த்தராவிகள், அவர்களின் தலைமுடி காதுகளின்கீழ் அருகுவறையில் வளர்ந்திருந்ததென்று எழுதிவிட்டார்கள். மற்றும் சிலர் யாசீன் நபி (சல்) அவர்கள் தங்கள் தலையில் எண்ணையிட்டு சீவி விட்டிருக்கும்போது முடி நீளமாகத் தோள்களைத்தொட்டுக்கொண்டிருக்கும்போது பார்த்து அவ்விதமே சொல்லியிருக்கவேண்டும். ஆகவே மூன்று விதகாலத்தில் பார்க்கப்பட்டதால் மூன்றுவிதமான ரிவாயத்துகள் ஏற்பட்டுவிட்டது. எனவே, இந்த ரிவாயத்துகளைக்கொண்டு நபி நாயகம் (சல்) அவர்கள் நடுக்காது முதல் தோள்களைத்தொட்டுக்கொண்டிருக்கிற நிலைமை வரையில் மயிர் வளர்த்து வந்தார்களென்று தெரிகிறது. ஆகையால் அவ்விதம் மயிர் வளர்ப்பது சுன்னத்தாயிருக்கும். தோள்களுக்குக்

கீழ் முடிதொங்கும்படியாக விடக்கூடாது. ஆனால் ஷாபிஇ மத்ஹபின்படி இவ்விதம் செய்வது மக்ரூஹாயிருக்குமென்று "இஹ்யாவுல் உலூமித்தீன்" என்றகிதாபில் எழுதப்பட்டு வருகிறது.

இனி தலைமுடியில் சிலவற்றைச்சிறைத்து, சிலவற்றைச்சிறைக்காமல் விட்டுவிடுவது ஜாய்சர்காத் அரபியர்கள் இவ்விதம் செய்வதற்கு "கசகு" என்று சொல்லுகிறார்கள். இவ்விதம் செய்வது ஜாய்சல்லவென்று இமாம் நவவீ, இமாம் கலீல் அஹ்மது முதலிய பெரியபுகஹாக்கள் சொல்லியிருக்கிறார்கள். இதற்காதாரமாக கீழேசொல்லப்பட்டிருக்கிறஹதீது "சஹீஹ் புகாரி" "முஸ்லிம்" முதலியஹதீதுகிதாபுகளில் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது: ஒருநாள் ரசூலேகரீம் (சல்) அவர்கள் ஒருபையனுடைய தலைமுடி பாதி சிறைக்கப்பட்டும் பாதி சிறைக்கப்படாமலும் இருப்பதைக் கண்டு அவ்விதம்செய்யக்கூடாதென்றும் சிறைப்பதாயிருந்தால் தலை முடியடங்கலும் சிறைக்கவேண்டும் என்றும் வளர்ப்பதாயிருந்தால் பூராவும் ஒன்றுபோல் வளர்க்கவேண்டும் என்றும் திருவுளமானார்களென்று அப்துல்லாஹ் இப்னுஉமர் (ரலி) அவர்களைத் தொட்டும் ஒருரிவாயத்து வந்திருக்கிறது. இந்த ஹதீதைக் கொண்டு மிகுதமான இமாம்களும் தலைமுடியை அறைகுறையாக வைப்பது ஜாய்சல்லவென்றும் எழுதியிருக்கிறார்கள். ஆனால், இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இவ்விதம் செய்வது மக்ரூஹென்று "இஹ்யாவுல் உலூமித்தீன்" என்றகிதாபில் எழுதியிருக்கிறார்கள்.

தற்காலங்களில் நமது இந்தியாதேசத்தில் பற்பலவிதமாகத் தலையில் மயிர் வளர்த்து வருகிறார்கள். மிகுதமாக ஜனங்கள்செய்துவரும் வழக்கத்தைப்பற்றிச் சிறிதுசொல்வது அவசியமாயிருக்கிறது.

முதலாவது. நமது தேசத்தில் மிகுதமாகச் சிறுபிள்ளைகளுக்குத் தலையின் உச்சியில் மாத்திரம் கொஞ்சம் மயிர்விட்டு பாக்

கியைச் சிறைத்துவிடுகிறார்கள். இதற்குச் "சோட்டி முடி" யென்று சொல்லப்படுகிறது. இவ்விதம் செய்வது கடினமக்ரூ ஹாயிருக்குமென்று "மஞசிக்" கென்றகிதாபில் முல்லா அலிகாரி அவர்கள் எழுதியிருக்கிறார்கள். இன்னும் ஹஜ்ஜாஜ் இப்னுஹஸ்ஸான் (ரலி) அவர்கள் சொல்லுகிறார்கள். "நான் சிறுவயதாயிருக்கும்போது என்தலையில் கொஞ்சம்முடி மாத்திரம் நீளமாக வளர்ந்திருந்தது. அதை அனசு இப்னுமாலிக் (ரலி) அவர்கள் பார்த்து றசூலே அக்ரம் (சல்) அவர்களுக்கறிவிக்க, நாயகம் (சல்) அவர்கள் என்தலையில் கையைவைத்து முபாரக்கான துஆச்செய்து, தலையில் கொஞ்சம்முடியை மாத்திரம் நீளமாகவளர்ப்பது எஹூதிகளின் வழக்கமாகையால் அவ்விதம் செய்யக்கூடாதென்றும் கண்டிப்பான உத்தரவுசெய்தார்கள். ஆகையால் மூஸ்லீம்சகோதரர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சோட்டிமுடிவளர்ப்பதைவிட்டும்தவிழ்ந்து கொள்வது அவசியமாயிருக்கும்.

இரண்டாவது. தற்காலத்தில் மிகுதமான முஸ்லீம் ஜனங்கள் மேனாட்டு வழக்கத்தை யனுசரித்துத்தலையில் பின்புறமிருக்கும் மயிர்களை சன்னமாகவெட்டிமுன்புறத்தில் மயிர் வளர்த்து வருகிறார்கள். இதற்குக் கிராப்பு என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் செய்வது கடினஹராமாயிருக்கும். ஏனென்றால், தலைமுடியை ஏற்றக்குறைவாக வெட்டக்கூடாதென்றும், காபிர்களை யொப்பாகிறவன் அக்காபிர்களிடையே எழுப்பப்படுவானென்றும் ஹதீது ஷரீபில் வருகிறது. ஆகையால் முஸ்லீம் சகோதரர்கள் இதை விட்டும் தவிழ்ந்து கொள்வார்களாக.

மூன்றாவது. இருபுறமும் காதுக்குமுன்னால் தலைரோமத்தைச்சேர்ந்த முடியை மாத்திரம் வளர்த்துவதாயிருக்கும். இதற்கு சுல்பாமுடியென்று சொல்லப்படுகிறது. இவ்விதம் சுல்பா முடி வளர்த்துவது கடினஹராமாயிருக்குமென்று "நிஸ்ஸாபுல் இஹ்திஸாபு" என்றகிதாபில் எழுதப்பட்டு வருகிறது.

நான்காவது. தலையில் நெற்றிக்குமேல் இருபுறமும் கொம்புகள் போல மயிர் சிறைப்பதாயிருக்கும். இதுவும் நமது நாட்டில் மிகுதமான முஸ்லீம்ஜனங்களின் வழக்கமாயிருக்கிறது. இதுவும் மார்க்கசட்டவிரோதமாயிருக்கும்.

மேலே குறிப்பிடப்பட்டவைகளல்லாமல் வேறு பலவிதமாகவும் நமது நாட்டில் மயிர் வளர்த்துவருகிறார்கள். உதாரணமாக, நடுஉச்சியில் மாத்திரம் கொஞ்சம் மயிர்விட்டு மற்றவைகளைச் சிறைப்பதும், தலையின் முன்பாகம் நெற்றியிலிருந்து உச்சிவரையில் சிறைத்துவிட்டு பாக்கிமுடிகளை வளர்ப்பதும், தலையின் உச்சியில் மாத்திரம் கொஞ்சம் மயிர் சிறைப்பதும், இவ்விதம் பல்விதமாகச்செய்து வருகிறார்கள். இவையடங்கலும் ஹராமாயிருக்கும்

ஆனால், மிகவும் அவசியமான காரணம் ஏற்பட்டால் மேலே சொன்னவைகளில் யாதாவதொரு விதமாகச்செய்வது தங்கடத்தின் சபபைக்கொண்டு ஜாய்சாதுமென்று வருகிறது. உதாரணமாக, ஒருவனுக்குத்தலையில் எங்கேயாவது ஓரிடத்தில் புண்ணிருந்து, புண்ணுக்குமேல் அல்லது பக்கத்திலிருக்கும் முடிகளைச் சிறைப்பது கூடாமையாயிருந்தால், அவ்விடத்திலுள்ள முடியைச் சிறைக்காமல், மற்றபாகத்திலுள்ள முடிகளைச் சிறைத்துக்கொள்வது ஜாய்சாயிருக்கும்.

இனி, ஆண்பிள்ளைகள் தலைமுடியைப் பின்னுவது ஜாய்சல்ல. ஆனால் இஹ்ராமுடைய காலத்தில் ஆண்பிள்ளைகள் தலைமுடியைப் பின்னுவது ஆதுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமே, ஆண்பிள்ளைகள் தலைமுடியைக் கொண்டைபோட்டுக் கட்டுவது ஜாய்சல்ல ஆண்பிள்ளைகளில் கொண்டைபோட்டுக்கட்டுவதுஷைத்தானுடைய தொழிலாயிருக்குமென்று ரசூலே அக்ரம் (சல்) அவர்கள் திருவுளமானதாக அலி (ரலி) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். இன்னும் ஒருவன் கொண்டை போட்டுக்கொண்டிருக்கிற நிலைமையில் தொழுகிறது மக்ரூஹென்றும் ஷரஹுக்கு விரோதமானதென்றும் சொல்லப்பட்டு வருகிறது.

இனி, தலைமுடியை மூக்குக்கு நேராகத் தலையின் நடுவில் ரோமத்தை இருபிளவாகப்பிளந்து மாங்கெடுப்பது ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் சுன்னத்தாயிருக்கும். மாங்கெடுக்காமல் விட்டுவிடுவதும் ஆகுமென்று "மிர்காத்" முதலிய பிக்ஹு கிதாபுகளில் எழுதப்பட்டு வருகிறது. இன்னும் ரசூலே அக்ரம் (சல்) அவர்கள் மதீனாஷரீபுக்கு ஹிஜ்ரத்போயிருந்தபொழுது மதீனாவில் நஸாராக்கள் தலையில் மாங்குவிடாமலும் மற்றமுஷ்ரிக்கீன்கள் மாங்குவிட்டும் இருப்பதைக்கண்டு நபி பெருமான் (சல்) அவர்களுக்கு முஷ்ரிக்கீன்கள் பேரிலிருந்த வெறுப்பினால் தாங்களும் மாங்குவிடாமல் இருந்தார்கள். அப்போது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நாயகம் (சல்) அவர்களிடம் வந்து மாங்குவிடும்படியாகச் சொன்னார்கள். அதன் பிறகு ஹபீபேகுதா (சல்) அவர்களும் அவ்விதம் மாங்கெடுத்தார்களென்று ஹதீதுஷரீபினால் தெரியவருகிறது. ஆகையால் முஸ்லீம் சகோதரர்கள் தலையில் முடிவளர்ப்பதை நாடுவார்களேயானால், தலைரோமத்தை மாங்கெடுத்துவிடுவது சுன்னத்தாயிருக்கும் என்பதை கவனிப்பார்களாக.

3. ஆண்பிள்ளைகள் தலைமுடியைச்சிறைப்பதன் பயான்.

தலைமுடியை அலி (ரலி) அவர்களும் இன்னும் சிலசஹாபாக்களும் சிறைப்பித்துவந்தார்களென்று மேலே சொல்லப்பட்டிருக்கிறது. இதைக்கொண்டு தலைமுடியைச்சிறைப்பது முபாஹு என்னும் ஆகுமானதாயிருக்குமென்று மிகுதமான உலமாக்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தலைமுடியைச்சிறைக்கும்பொழுது சிற்சில விஷயங்களை கவனிக்கவேண்டும்.

முதலாவது. தலைரோமம் வளர்ப்பதாயிருந்தால் எவ்விதம் அடங்கலும் வளர்க்கவேண்டுமோ, அவ்விதமே சிறைப்பதாயிருந்தாலும் அடங்கலும் சிறைக்கவேண்டும். ஆகவே காதுக்கும் கண்ணுக்குமிடையிலுள்ள உயரமானஎலும்பின்மேல் நுனிக்குமேற்பாகமுள்ளதெல்லாம் தலைரோமத்துக்குச் சேர்ந்ததாதலால், தலைமுடியைச்சிறைக்கும்பொழுது அந்தத்தானம் வரையில் சிறைக்க

வேண்டும். இவ்விதமாகவே இமாம் நவவீ, இமாம் அபூஇஸ்ஹாக், இமாம் ஜலாலுத்தீன் முதலிய பெரிய புகஹாக்கள் எழுதியிருக்கிறார்கள். தற்காலங்களில் மிருதமான முஸ்லீம் ஜனங்கள் அழகையுத்தேசித்தோ அல்லது மார்க்கசட்டங்கள் தெரியாமலோ தாடியை மேற்சொன்ன தானத்துக்குக்கொஞ்சம் மேற்பாகத்திலிருந்து வளர்த்து வருகிறார்கள். இவ்விதம் செய்வது மார்க்க சட்ட விரோதமென்று மிருதமான இமாம்கள் எழுதியிருக்கிறபடியால் முஸ்லீம்சகோதரர்கள் இதைவிட்டும் தவிழ்ந்துகொள்ளவேண்டும்

இரண்டாவது. தலைமுடியைச்சிறைக்கும்பொழுது வலதுபாகத்தில் தொடங்கி இடதுபாகத்தில் முடிப்பது சுன்னத்தாயிருக்கும். நபிபெருமான் (சல்) அவர்கள் இவ்விதம் செய்து வரும்படியாக சஹாபாக்களுக்குத்திருவுளமானதாக "சஹீஹ் புகாரி" என்ற கிதாபில் வருகிறது.

மூன்றாவது க்ஷவரம் செய்துகொள்ளும் பொழுது, சிறைத்துக் கொள்ளுகிறவன் மேற்குமுகமாகவும், நாவிதன் கிழக்கு முகமாகவும் இருப்பது சுன்னத்தாயிருக்கும்

நான்காவது. க்ஷவரம் செய்து முடிந்தபின் க்ஷவரம் செய்யப்பட்ட ரோமம், நகம் வகையறுக்களைப்பூமியில் புதைப்பது சுன்னத்தாயிருக்குமென்று" சிராஜுல் வஹ்ஹாஜ்" என்ற கிதாபில் எழுதப்பட்டுவருகிறது.

இவ்விஷயங்களைப்பற்றி ஒருஹிக்காயத்து வந்திருக்கிறது. இமாமுல்அஃலம் அபூஹனீபா(றஹ்) அவர்கள் ஹஜ்ஜுக்காகமக்கா ஷரீபுக்குப்போயிருந்தபொழுது க்ஷவரம்செய்து கொள்வதற்காக உட்கார்ந்தார்கள். அப்போது நாவிதன் அவர்களுக்கு மூன்று உபதேசங்கள் செய்ததாக இமாமவர்கள் எழுதியிருக்கிறார்கள். அவைகளாவன:- (1) க்ஷவரம் செய்துகொள்ள உட்காரும்பொழுது செய்துகொள்ளுகிறவன் மேற்குமுகமாகவும் நாவிதன் கிழக்குமுக

மாகவுமிருக்கவேண்டும். (2) க்ஷவரம் செய்யும் போது வலது பக்கம் தொடங்கி இடது பக்கம் முடிக்க வேண்டும் (3) சிறைக்கப்பட்ட ரோமம், நகம் வகையறுக்களை க்ஷவரம் செய்து முடிந்தபின் புதைக்க வேண்டும். இம்மூன்று உபதேசங்களையும் இமாமவர்கள் ஒப்புக்கொண்டதாகவும் எழுதியிருக்கிறார்கள்.

இவ்விஷயத்தில் நாம் கவனிக்கவேண்டியதென்னவென்றால், இமாமவர்கள் அக்காலத்திலுள்ள எல்லா இமாம்களுக்கும் கிரீடமாகவிளங்கியிருந்தும், கேவலம் ஒரு நாவிதனுடைய சொற்களை மிகவும் சந்தோஷத்தோடு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அறிவைப்புகட்டுவது யாராயிருந்தபோதிலும் அந்த அறிவு நமக்குச்சரியானதென்று தோன்றுமானால் நாம் அதை ஒப்புக்கொள்ளவேண்டும். அந்த அறிவைப்புகட்டுகிறவன் கல்வி முதலியவைகளால் நம்மைவிட மிகவும் தாழ்ந்த அந்தஸ்திலுள்ளவனென்று தள்ளிவிடக்கூடாது.

இனி மனிதனுடைய சிறைக்கப்பட்ட முடி துப்புரவானதாயிருக்குமென்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் ஹனபி மத்ஹபின்படி சிறைக்கப்பட்ட முடியை வைத்துக்கொண்டு தொழுதல் தொழுகை ஜாய்சாய் விடுமென்று வருகிறது.

4. பெண்பிள்ளைகள் தலையில் மயிர் வளர்ப்பதன் பயான்.

ஒன்பது வயதுக்குமேற்பட்ட பெண்பிள்ளைகள் தலை முடியைச் சிறைப்பது கடின ஹராமாயிருக்கும். பெண்பிள்ளைகள் தலை முடியைச் சிறைக்கக்கூடாதென்றும், அவ்விதம் தலைமுடியை எந்தப்பெண் சிறைக்கிறாளோ, அவளைக்கடினமான அதாபுசெய்யப்படுமென்றும் றசூலேகரீம் (சல்) அவர்கள் திருவுளமானதாக "மிஷ்காத்" என்ற கிதாபில் வந்திருக்கிறது. இன்னும் புருஷன் தன் பெண்சாதியின் தலைரோமத்தைச் சிறைக்கும்படி உத்திரவு கொடுத்தாலும் பெண்சாதி அவ்விதம் சிறைப்பது ஜாய்சல்ல. ஏனென்றால் ஆண்டவன் ஹக்சுப்ஹான ஹுவதஆலா ஒரு விஷயத்தைச் செய்யவேண்டாமென்று விலக்கியிருக்கும்பொழுது

அதேவிஷயத்தை மனிதனுடைய சொல்லுக்காகச் செய்வது ஜாய்சாகாதென்று "பஸாஸிய்யா" என்றகிதாபில் எழுதப்பட்டிருக்கிறது.

இனி, ஒருபெண் ஆண்வேஷம் போடுவதை யுத்தேசித்து, தலைமயிரைச்சிறைப்பாளேயானால், அவள்பேரில் ஆண்டவனின் முனிவு உண்டாகுமென்று "பதாவா ஆலம்கீரி" யில் வருகிறது. இதைப்போலவே, ஒருபெண் தலைமுடியைப் பிடரிக்குக்கீழ் வளரவொட்டாமல் வெட்டிவிடுவதும் ஜாய்சல்லவென்று முல்லா அலிகாரிஅவர்களால் "மிர்காத்" என்றகிதாபில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால், பெண்கள் ஆண்களையொப்பாவதையெண்ணி எக்காரியமும் செய்யக்கூடாது. அவ்விதம் செய்வதால் ஆண்டவனுடைய கோபப்பார்வையவள்பேரில் உண்டாகும் என்பதைக் கவனிக்கவேண்டும்.

இனி, பெண்கள் தங்கள் தலை முடியை நீளமாக வளர்ப்பது மிகவும் சிறந்ததாயிருக்கும். ஆனால் வியாதியின் காரணமாகப் பெண்களின் தலை முடியைவெட்டுவது அல்லது சிறைப்பது அவசியமாயிருந்தால், அவ்விதம்வெட்டுவதும் சிறைப்பதும் ஆகுமானதாயிருக்கும். ஒன்பது வயதுக்குக்கீழ்ப்பட்டபெண்பிள்ளைகளுக்குத்தலை முடியைச் சிறைப்பதும் வெட்டுவதும் ஜாய்சாயிருக்கும்.

பெண்பிள்ளைகள் தலையில் கொண்டைபோட்டுக்கட்டுவதும், பின்னல் போட்டுக்கொள்ளுவதும் ஜாய்சாயிருக்கும். ஆனால் பின்னல்போட்டுக்கொண்டிருக்கும்போது முளுக்கு நீங்குவதற்காகக்குளிக்கவேண்டியதாக ஏற்பட்டு, பின்னலை அவிழ்க்க வில்லையானால், ரோமக்கால்களடங்கலிலும் நீர் செலுத்துவது அவசியமாயிருக்கும். உம்முசல்மா (ரலி) அவர்கள் ஒருநாள் ரசூலே அக்ரம் (சல்) அவர்களிடம் "யாரசூலுல்லா, நான் எப்போதும் என்னுடைய தலைமுடியைப் பின்னினவளாயிருக்கிறேன். நான் குளிக்க வேண்டுமானால் என்னுடைய பின்னலையவிழ்ப்பது

அவ்வசியமா?'' என்றுகேட்டார்கள். அதற்கு ஹாமீம் நபி(சல்) அவர்கள் ''பின்னலையவிழ்க்கவேண்டியதில்லை. ஆனால் ரோமக் கால்களவரையில் தண்ணீர் செல்லும்படியாக மூன்று தடவை தண்ணீர் செலுத்தவேண்டும்'' என்று திருவுளமானதாக ''சஹீஹ் முஸ்லிம்'' என்றகிதாபில் வருகிறது. இந்தஹதீதில் மூன்று தடவைதண்ணீர் செலுத்தவேண்டும் என்னும் சொல்லைக் கொண்டு முல்லா அலிகாரி அவர்கள் தலைரோமங்களடங்கலிலும் தண்ணீர் செலுத்துவது ஷர்த்தென்று எழுதியிருக்கிறார்கள். ஷாபிஇமத்ஹபின்படி பின்னல்போட்டுக்கொண்டிருக்கும்போது முடிகளுக்குள் தண்ணீர் செல்லாதிருக்குமானல் பின்னலை யவிழ்த்துவிட்டு முடிகளடங்கலிலும் தண்ணீர் செலுத்துவது அவசியமாயிருக்கும்.

பெண்கள் தலைமுடியுடன் இதரமுடிகளைச் சேர்த்திக்கட்டு வது ஜாய்சாகாது. தற்காலத்தில் நமது இந்தியா தேசத்தில் மிகு தமான பெண்கள் தலை மயிருடன் கவரிமான் மயிர் போன்றஇதர முடிகளைச் சேர்த்துவைத்துக் கொள்ளுகிறார்கள். அரபிதேசத்தில் பெண்கள் மிகுதமாக ஒட்டகத்தின் கருப்புமுடியைச் சேர்த்து வந்தார்களென்று தெரிகிறது. ரசூலே அக்ரம் (சல்) அவர்கள் ''தலை முடியுடன் வேறெவ்விதமான முடியையும் சேர்க்கும் ஆண் பெண்கள் லஃனத்துச்செய்யப்படுவார்கள்'' என்று திருவுள மானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ஆண்பெண்கள் இவ்விஷயத்தை கவனித்து தலைமுடியுடன் வேறுமுடிகளைச்சேர்த் துவதை விட்டும் தவிழ்ந்துகொள்ளவேண்டும். ஆனால் தலைமுடி யுடன் இதரமுடிகளைச்சேர்த்து வைத்துக்கொண்டு தொழுவத ளுல் தொழுகைக்கு யாதொரு பங்கமும் ஏற்படாது. தொழுகை ஜாய்சாய்விடும் என்று ''பதாவா ஆலம்கீரி''யில் வருகிறது.

இனி பெண்கள் தங்கள் தலைமுடியை சிகப்புநிறமுள்ள நாடா அல்லது சிகப்புப்பட்டுக்கயிற்றைக்கொண்டு கட்டுவது ஜாய்சாயி ருக்குமென்று ''மஜ்மஉல் பிஹார்'' என்றகிதாபில் வருகிறது.

5. ஹஜ்ஜூ, உம்ராவுடைய காலத்தில் முடியெடுப்ப தன் பயான். ஹஜ்ஜூக்காவது அல்லது உம்ராவுக்காவது ஒருவன் இஹ்ராம் கட்டுவானானால், அவன் தன் தேகத்திலுள்ள எவ்வித ரோமங்களையாவது சிறைப்பது அல்லது வெட்டுவதும் நகங்களைத்தரிப்பதும் ஜாய்சாகாது. ஆனால் இஹ்ராம் கட்டுவதற்கு முன் இக்கருமங்கள் செய்வது ஜாய்சாயிருக்குமென்று "ஸிராஜூல் வஹ்ஹாஜ்" என்றகிதாபில் வருகிறது. இனி ஹஜ்ஜூடையை காலத்தில் மஃஹூதுடைய நேரத்தில் தலை முடியை நீக்குவது ஆண் பிள்ளைகளுக்கு மிகவும் தவாபானதாயிருக்கும். வெட்டுவதும் ஆகுமென்று வந்திருக்கிறது. ஷாபிஇ மத்ஹபின்படி மூன்று முடியையாவது எடுப்பது வாஜிபாயிருக்கும். ஆகையால் மூன்று முடிகளைச்சிறைத்தாலும் போதும் என்று "மின்ஹாஜ்" என்றகிதாபில் வருகிறது. இனி ஒருவனுக்குத்தலைவழுக்கையாயிருக்குமானால் அல்லது தலையில் முடியில்லாமலிருக்குமானால் ஹனபி மத்ஹபின்படி தலையை கத்தியைக்கொண்டு வழிப்பது வாஜிபாயிருக்கும். ஆனால் ஷாபிஇ மத்ஹபின்படி அவ்விதம்செய்வது முஸ்தஹப்பாயிருக்கும். இனி ஒருவனுக்கு அச்சமயம் கத்தி கிடைக்காவிட்டால், ரோமசங்காரி போன்றவஸ்துக்களைக்கொண்டு முடியை நீக்குவதும் ஆகுமென்று "பதாவா ஆலம்கீரி"யில் வருகிறது. ஹஜ்ஜூடைய காலத்தில் இஹராம் கட்டின பெண்பிள்ளைகள் மஃஹூதுடைய நேரத்தில் கொஞ்சம்முடியைவெட்டுவது அவசியமாயிருக்கும். ஆனால் அப்போது அவர்கள் தலைமுடியைச் சிறைப்பது கூடாதென்று "ஆலம்கீரி" என்றகிதாபில் வருகிறது. ஆனால் ஷாபிஇ மத்ஹபின்படி பெண்களும் மூன்று முடியைச்சிறைத்தாலும் அல்லது வெட்டினாலும் போதுமென்று "ஷரஹூ மின்ஹாஜ்" என்றகிதாபில் வருகிறது. இனி, ஆணும் பெண்ணுமல்லாத கோஜாக்களுக்கு ஹஜ்ஜூடைய காலத்திலும் ஹஜ்ஜல்லாத காலத்திலும் க்ஷவரத்தைப்பற்றிய விஷயங்களில் பெண்களுடைய ஹூக்மின்படியாயிருக்கும்.

இனி துல்ஹஜ்ஜூ மாதத்தில், அந்தவருஷம் ஹஜ்ஜூக்குப் போகாதவர்களில் யாராவதுகுர்பானி கொடுக்க நாடுவார்களே

யூர்ஹல் அந்தமார்தம் பிறை கண்டதுமுதல் குர்பானி கொடுக்கும் வரையில் தன் தேகத்திலுள்ள எந்த ரோமத்தையாவது சிறைக்காமலும் வெட்டாமலுமிருப்பதும் நகங்களைத்தரிக்காமலிருப்பதும் சுன்னத்தாயிருக்குமென்று ரசூலே அக்ரம் (சல்) அவர்கள் திருவுளமாயிருக்கிறார்களென்று "சஹீஹ்முஸ்லிம்" என்ற கிதாபில் எழுதப்பட்டுவருகிறது.

---

2. முகரோமங்களின் பயான்.

---

1. தாடி வளர்ப்பதன் பயான். கன்னத்திலும் மோவாய்க்கட்டையிலுமிருக்கும் மயிருக்கு தாடியென்று சொல்லப்படுமென்று "காமூஸ்" என்னும் அகராதியில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே காதுக்கும் கண்ணுக்கும் இடையிலுள்ள உயரமான எலும்பின் மேல் நுனிக்குக்கீழ் கன்னத்திலும் மோவாய்க்கட்டையிலும் கீழ்உதட்டுக்குக்கீழுள்ள இடத்திலுமிருக்கும் முடிகளெல்லாம் தாடிமுடியைச் சேர்ந்ததாயிருக்குமென்று இதனால் தெரிகிறது.

இனி தாடி வளர்ப்பது ஒவ்வொருமுஸ்லீம் ஆண்பிள்ளைகளின் பேரிலும் கடமையாயிருக்கும். ரசூலே அக்ரம் (சல்) அவர்கள் "தாடியை வளருங்கள், மீசையை வெட்டுங்கள்" என்று திருவுளமானதாக "முஸ்லீம்" என்றகிதாபில் ஒருஹதீது வந்திருக்கிறது. ஆகையால் தாடியைச்சிறைப்பது நாயகத்திருமொழிகளுக்கு மாற்றமாகவும் கடினமான ஹராமுமாயிருக்கும். இன்னும் தாடியைச் சிறைப்பது மிகுதமாக முஷ்ரிகீன்களுடைய வழக்கமாயிருப்பதால் முஸ்லீம் சகோதரர்கள் அதைவிட்டும் தவிழ்ந்துகொள்வது வாஜிபென்னும் கடமையாயிருக்கும்.

தற்காலங்களில் மிகுதமான முஸ்லீம் ஜனங்களும் மேனாட்டு நாகரீகத்தையனுசரித்து தாடியைச் சிறைத்தும் மீசையை ஹத்துக்கு மீறிவளர்த்தும் வருகிறார்கள். அவ்விதம் செய்வதால்

சர்வரேகாயினுத் (சல்) அவர்கள் திருமொழிகளுக்கு மாறு செய்கிறதாவதுடன், காபிர்களையொப்பாகிற குற்றமும் ஏற்படுகிறது. ஷபா அத்துநாதராகிய நாயகம் (சல்) அவர்கள் ஏவியிருப்பதற்கு மாறுசெய்வோமானல், மஹ்ஷர்மைதானத்தில் நமக்குஷபா அத்து செய்வார் யார்? ஆகையால் இம்மையிலும் மறுமையிலும் ஈடேற்றத்தை நாம் இச்சிப்போமாயின், ரசூலே அக்ரம் (சல்) அவர்களின் திருமொழிகளையங்கீகரித்து, முஷ்ரிகீன்களாகிய காபிர்களின் பழக்கவழக்கங்களைவிட்டும் தவிழ்ந்துகொள்ளவேண்டும்.

இன்னும் தாடியைச்சிறைக்கும் நாவிதர்களும் அவ்விதம் செய்வதால் ஹராம் செய்தவர்களாகிவிடுகிருர்கள். செய்துகொள்ளுகிறவன் அவ்விதம் செய்யும்படி உத்தரவு கொடுத்திருந்த போதிலும் நாவிதர்கள் அவ்விதம் செய்வது ஹராமாயிருக்கும். தற்காலங்களில் முஸ்லீம் நாவிதர்கள் க்ஷவரம் செய்கிறவர்களின் உத்தரவிருந்தால் போதுமென்று நினைக்கிருர்கள். அதனல் அவர்களுக்குத் தண்டனையில் கொஞ்சமேனும் குறையாது.

இனி தாடிவளர்ப்பது கையால் ஒரு பிடிக்குக்குறையாமல் வளர்க்கவேண்டும். அவ்விதம் கையால் ஒருபிடிக்குக் குறைவாக வளர்ப்பது ஷிபார்க்களின் வழக்கமென்றும் அதைவிட்டும் நாம் தவிழ்ந்துகொள்ளவேண்டுமென்றும் "ஷரஹு மஸாபீஹ்" என்ற கிதாபில் எழுதப்பட்டிருக்கிறது. இதற்காதாரமாக கீழ்க்கண்ட ஹதீதும் சொல்லப்படுகிறது. ரசூலேகரீப் (சல்) அவர்கள் தங்கள் முபாரக்கான தாடிமுடியில் நீளமாகவும் குட்டையாகவுமுள்ள முடிகளைச்சமமாக வெட்டிக்கொண்டு வந்தார்களென்று "திருமதி" என்றகிதாபில்ஒரு ஹதீது வந்திருக்கிறது. இதற்கு வியாக்யானம் எழுதும் பொழுது சர்வரேஆலம் (சல்) அவர்கள் எப்போதும் தங்கள் தாடிமுடியை, கையால் ஒருபிடிக்குக்குறையாமல்வளர்த்து வந்தார்களென்றும் அதற்குமேல் நீளமாக இருக்கும் முடிகளைச்சமமாகவெட்டிக்கொண்டு வந்தார்களென்றும் "மபாதீஹ்" என்றகிதாபில் எழுதப்பட்டிருக்கிறது.

இனி உமர் (ரலி) உதுமான் (ரலி) அலி (ரலி) ஆகிய இவர்கள் தாடியைநெஞ்சு வரையில் நீளமாக வளர்த்து வந்தார்களென்று "மதாரிஜ்" என்றகிதாபில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த தலீலேக்கொண்டு தாடியை நீளமாக வளர்ப்பதும் ஆகுமென்று சில இமாம்கள் சொல்லியிருப்பதாக "ஹமீதிய்யா" என்றகிதாபில் எழுதப்பட்டிருக்கிறது.

இனி கன்னத்தில் தாடியைச்சேராத முடிகளிருந்து அவைகள் கன்னத்தை மறைக்குமென்றிருந்தால் அவைகளைச் சிறைப்பது ஜாய்சாயிருக்குமென்று அபூஹனீபா (ரஹ்) அவர்கள் சொல்லியிருப்பதாக "பதாவேஹிமாதிய்யா" என்றகிதாபில் எழுதப்பட்டிருக்கிறது. இதைப்போலவே தாடியைச்சேராத முடிகள் கன்னத்திலிருந்தால் அவைகளைச்சிறைக்கலாமென்று "முலுமிராத்" என்றகிதாபில் ஒரு ரிவாயத்து வந்திருக்கிறது.

தாடிமுடியைக் கோதும்போது ஏதாவதொரு முடிஉதிர்ந்து முழுமுடியாகக்கிடைத்தால் அதைத்துண்டு துண்டாக நருக்கிப் போடவேண்டுமென்றும், அவ்விதம் செய்யாமல் முழுமுடியாகப் போட்டுவிட்டால் அதைக்கொண்டு சூனியம் செய்தால் மிகுதமாக பலிக்கக்கூடுமென்றும் "வசீலத்துத்தாலிப்" என்றகிதாபில் வருகிறது. இவ்விதமாகவே நபி நாயகம் (சல்) அவர்களும் திருவுளமாயிருப்பதாக "பஹ்றுல் பவாயித்" என்றகிதாபில் எழுதியிருக்கிறார்கள். (வல்லாஹு அஃலம்)

இனி உதட்டுக்குக் கீழேயும் மோவாய்க்கட்டைக்கு மேலேயும் இருக்கும் பிள்ளைத்தாடியென்னும் சிறுதாடியும் தாடிக்குச் சேர்ந்ததாயிருக்கும். ஆகையால் அதைப்பிடுங்குவதும் சிறைப்பதும் மக்ரூஹாயிருக்கும். எவனொருவன் சிறுதாடியைச் சிறைக்கிறானே அவன் சாக்ஷிபத்தை ஒப்புக்கொள்ளக்கூடாதென்று உமர் (ரலி) அவர்கள் சொல்லியிருப்பதாக "சிராத்துல் முஸ்தகீம்" என்றகிதாபில் ஒரு ரிவாயத்து வந்திருக்கிறது.

இனி, சிறுதாடிக்கு இருபுறமும் உதட்டைச் சேர்ந்த பாகங்களிலுள்ள முடியைச்சிறைப்பது ஜாய்சென்றும் ஜாய்சில்லையென்றும் உலமாக்களுக்குள் இக்திலாபு வந்திருக்கிறது. சிறைக்காமலிருப்பதே நலம் என்று மிகுதமான உலமாக்கள் சொல்லுகிறார்கள்.

2 மீசை முடிகளைப்பற்றியபயான், ரசூலே அக்ரம் (சல்) அவர்கள் மீசையை வெட்டும்படியாக உத்திரவு செய்திருக்கிறார்கள். மீசையை வளர்ப்பது மஜூசிகளாகிய காபிர்களின் வழக்கமாகையால் அதைவிட்டும் நாம் தவிழ்ந்துகொள்வது அவசியமாயிருக்கும். ஆனால் மார்க்கயுத்தவீரர்கள் தங்களைக்கண்டு எதிரிகள் அஞ்சும்பொருட்டு மீசைகளை நீளமாக வளர்க்கலாமென்றும் காலித் இப்னுவலீத் (ரலி) அவர்கள் அவ்விதம் நீளமாகவளர்த்து வந்தார்களென்றும் "மதாலிபுல்முஃமினீன்" என்றகிதாபில் வருகிறது. ஆனால் உமர் (ரலி) அவர்கள் மீசைமுடிகளை நீளமாக வளர்த்துவந்தார்களென்றும், அதன்படி எல்லாஜனங்களும் மீசையை நீளமாக வளர்ப்பது ஜாய்சாயிருக்குமென்றும் சில இமாம்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் உமர் (ரலி) அவர்கள் ஓர் யுத்தவீரராகையால் யுத்தவீரர்களுக்குள்ள மஸ்அலாவின்படியே அவர்கள் மீசையை வளர்த்திருக்கவேண்டும். இன்னும் நாயகம் (சல்) அவர்கள் மீசையை வெட்டும்படியாக ஏவியிருப்பதை யுக்தேசிக்கும்போது மீசைமுடிகளை வெட்டுவதே சிறந்ததென்று தெரிகிறது.

தற்காலங்களில் சிற்சில முஸ்லீம் ஜனங்கள் மீசையைக்கணக்கு மீறிவளர்ப்பவர்களாயும், மீசையைச்சிறைப்பவர்களாயும் இன்னும் அரைமீசை, கால்மீசையாக நடுவில் மாத்திரம் கொஞ்சம் மயிர்வைப்பதுமாகப் பலவிதமாய்ச்செய்து வருகிறார்கள். இவ்விதம் செய்வது நாயகத்திருமொழிகளுக்கும் மார்க்கசட்டங்களுக்கும் விரோதமாயிருப்பதால் இவைகளைவிட்டும் முஸ்லீம் சகோதரர்கள் தவிழ்ந்துகொள்வார்களாக.

3. மூக்கத்திலுள்ள இதரரோமங்களின் பயான். மேலுதடு, கீழுதடுகளிலுள்ள முடியை மார்க்க யுத்தவீரர்களைத்தவிர

மற்ற எல்லா ஜனங்களும் வெட்டுவது சுன்னத்தாயிருக்கும். ரசூலே அக்ரம் (சல்) அவர்கள் தங்களின் உதட்டு முடிகளை வெட்டிக்கொண்டு வந்தார்களென்று இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களைத்தொட்டும் பேசப்பட்டு வருகிறது. இன்னும் "எவனொருவன் உதட்டுமுடிகளை வெட்டவில்லையோ, அவன் என்னிலிருந்துமுள்ளவனல்ல. அவன் என் வழிகளைப்பின்பற்றி நடந்தவனல்ல" வென்று நபி நாயகம் (சல்) அவர்கள் திருவுளமானதாக "நிசாயி" "திருமதி" முதலிய கிதாபுகளில் வருகிறது. இன்றும் நபி பெருமான் (சல்) அவர்கள் திருவுளமானார்கள். "கியாமத்து நாளில் ஹக்சுப்ஹானஹூவதஆலா எல்லா ஜனங்களையும் சஜதாச்செய்யும்படியாக உத்திரவு செய்வான். அப்போது எல்லாரும் சஜதாச் செய்வார்கள். ஆனால் துனியாவில் எவனொருவன் உதட்டுமுடிகளை வெட்டாமலிருந்தானோ, அவன்சஜதா செய்ய சக்திபெறமாட்டான். ஏனென்றால் அவனுடையஉதட்டுமுடிகள் இரும்பாணிகளைப் போலாகி அவன் சஜதாச்செய்யக்குனியும்போது பூமியில் குத்திக்கொண்டு அவன் நெற்றி பூமியில் படாமல் செய்துவிடும். அவன் சஜதாவின் பாக்கியத்தைப்பெறமாட்டான்" என்று "முல்மிராத்" என்றகிதாபில் எழுதப்பட்டிருக்கிறது. அரிய சகோதரர்களே! மஹ்ஷர்மைதானத்தில் எண்ணமுடியாத ஜனத்திரளில், உதட்டு முடிகளை வெட்டாதகாரணத்துக்காக சிறப்பாகிய சஜதாவையிழந்துவிடுவது மிகவும் வருந்தத்தக்கதாயிருப்பதால், இவ்விஷயத்தை நாம் கவனித்துத் தீங்கைவிட்டும் தவிழ்ந்துகொள்ளவேண்டும்.

இனி, மூக்கு முடியைப்பிடுங்குவதும் வெட்டுவதும் ஜாய்சாயிருக்கும். ஆனால் வெட்டுவதை விடப்பிடுங்குவதே நல்லதென்று தெரிகிறது. ரசூலே கரீம் (சல்) அவர்கள் "நீங்கள் உங்கள் மூக்குமுடியைப்பிடுங்கிக் கொள்ளுங்கள். அவ்விதம் செய்தால் சீக்கிரத்தில் முடி முளைக்காது" என்று திருவுளமானதாக உமர் இப்னு சுகைபு (ரலி) அவர்களைத் தொட்டும் ஒருரிவாயத்து வந்திருக்கிறது, இன்னும் நபிபெருமான் (சல்) அவர்கள் அலி (ரலி) அவர்

களுக்கு "நீங்கள் உங்கள் மூக்கு முடிகளை மாதத்துக்கு ஒரு முறையாவது பிடுங்குங்கள்" என்று திருவுளமான்தாக வருகிறது. ஆனால் வெட்டிக் கொள்ளுவதும் ஆகும் என்று சில இமாம்கள் எழுதியிருக்கிறார்கள்.

இனி, இரண்டு புருவங்களின் முடிகளை அழகைநாடி சிரைப்பது ஜாய்சல்ல. ஆனால், அவைகள் மிகுதமாய் வளர்ந்து கண் பார்வையை மறைப்பதாயிருந்தால் வெட்டிக் கொள்ளலாமென்று "ஹஸனுத்துர் ரிவாயத்" "தாத்தார் கானி" முதலிய கிதாபுகளில் வருகிறது. இவ்விதமே, அழகை நாடி இரண்டு புருவங்களுக்கிடையிலிருக்கும் முடிகளைச் சிரைப்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஜாய்சல்லவென்று தெரிகிறது.

இன்னும் "எவனொருவன் தன் புருவங்களைச்சீப்புக்கொண்டு சீவி வருகிறானோ, அவனை ஆண்டவன் எல்லா பலாமுசீபத்துகளை விட்டும் காப்பாற்றுவானென்றும் அவ்விதம் சீவும்பொழுது "அலம் நஷ்ரஹ்" என்னும் சூராவையோத வேண்டுமென்றும் ரசூலேகரீம் (சல்) அவர்கள் திருவுளமானதாக "ஷார் அத்துல் இஸ்லாம்" என்றகிதாபில் எழுதப்பட்டிருக்கிறது.

---

3 தலைக்குக்கீழுள்ள மற்ற ரோமங்களின் பயான்.

தொண்டைக்குச் சமீபத்திலிருக்கும் முடிகளைச் சிரைப்பது ஜாய்சில்லையென்று "ஆலம்கீரி" யென்ற கிதாபில் வருகிறது. ஆனால் இமாம் அபூ யூசுப் (றஹ்) அவர்கள் அவைகளைச்சிரைப்பது ஜாய்சென்று சொல்லியிருக்கிறார்கள். அக்குள் முடிகளைச்சிரைப்பதும் பிடுங்குவதும் ஜாய்சாயிருக்கும். ஆனால் பிடுங்குவதே மிகவும் சிறந்ததென்று மிகுதமான உலமாக்கள் எழுதியிருக்கிறார்கள். அவ்விதம் பிடுங்குவது நபிமார்களின் சுன்னத்தென்றும்

தாங்கள் அவ்விதம் செய்ய சக்திபெறவில்லையென்றும் இமாம் ஷாபிஇ (ரஹ்) அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இனி நெஞ்சு, முதுகு, கை முதலியவிடங்களிலுள்ள முடிகளைச் சிறைக்காமல் விட்டுவிடுவதே நல்லதென்று "கராயிப்" "சிராத்துல்முஸ்தகீம்" முதலிய கிதாபுகளில் எழுதப்பட்டிருக்கிறது.

இனி தொப்புளுக்குக்கீழ் மர்மஸ்தானத்திலுள்ள முடிகளைச் சிறைப்பதும் வெட்டுவதும் பிடுங்குவதும் ஜாய்சாயிருக்கும். ஆனால் சிறைப்பதே உத்தமமென்று எழுதப்பட்டிருக்கிறது. மேற்சொன்னமுடிகளை ரோமசங்காரி முதலியவைகளைக்கொண்டு நீக்குவது ஜாய்சாயிருக்குமென்றும் ஜாய்சில்லையென்றும் உலமாக்களுக்குள் இக்திலாபாய் வந்திருக்கிறது. மேற்சொன்ன முடிகளை 20 நாளுக்கொருமுறை சிறைப்பது மிகவும் நல்லதென்றும் 40 நாள்களுக்கதிகமாக வளரவிடுவது மக்ரூஹென்றும் எழுதப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன மஸ்அலாக்கள் ஆண்களுக்கும்பெண்களுக்கும் ஒரேவிதமாயிருக்கும்.

இனி தொடை, கால் முதலிய விடங்களிலுள்ள முடிகளைத் தங்கடத்தின் நிமித்தமல்லாமல் சிறைப்பது நல்லதல்லவென்று தெரிகிறது.

---

4. நகம் தரிப்பதன் பயான்.

மார்க்கயுத்தவீரர்களைத்தவிர மற்றெல்லோரும் நகத்தை விரலின் நுனிக்குமீறவிடாமல் தரிப்பது சுன்னத்தாயிருக்கும். ஆகையால் விரலின் நுனிக்குஅதிகமாக நகங்களைவளரவிடுவது மக்ரூஹென்று ஏற்படுகிறது. இன்னும் ரசூலேகரீம் (சல்) அவர்கள் "நீங்கள் உங்கள் நகங்களைத் தரித்துக்கொள்ளுங்கள், விரலின்

நுனியைவிட நீளமாக வளரும் நகத்தின்பேரில் ஷைத்தான் உட்காருவான்'' என்று அபூஹுரைரா (ரலி) அவர்களுக்குத்திருவுளமானதாக இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் "இஹ்யாவுல் உலூமித்தீன்'' என்றகிதாபில் எழுதியிருக்கிறார்கள். இன்னும் "எவனொருவன் தன் நகங்களை நீளமாகவளர்க்கிறானோ அவனுடைய ரிஸ்கு குறைவுபடுமென்று "காஸிகான்'' என்றகிதாபில் வருகிறது. ஆகையால் நகங்களைத் தரிக்காமல் விடுவதால் ஏற்படும் கெடுதிகளைகவனித்து, நகங்களைத் தரித்துவருவது அவசியமாயிருக்கும்.

ஆனால் மார்க்கயுத்தவீரர்கள் நகங்களைவளர்ப்பது முஸ்தஹப்பாயிருக்குமென்று "ஆலம்கீரி'' என்றகிதாபில் வருகிறது. இன்னும் உமர் (ரலி) அவர்கள் பீசபீலுக்குப்போகும் யுத்தவீரர்கள் நகங்களை நீளமாகவளர்க்கவேண்டுமென்று உத்தரவு செய்ததாகவும் தெரிகிறது.

நகம் தரிப்பதற்குக் குறித்த ஒருநேரம் தேவையில்லை. எப்பொழுது வளருகிறதோ, அப்போது வெட்டிக்கொள்ளலாம். இவ்விஷயத்தைக்குறித்து ஒருஹிகாயத்து வருகிறது. ஒருநாள் ஹாரூன்றஷீத் பாத்துஷா அவர்கள் இமாம் அபூயூசுப் (ரஹ்) அவர்களிடம் நகங்களை இரவில்தரித்துக்கொள்ளலாமாஎன்று கேட்க இமாமவர்கள் அவ்விதம் தரிப்பது ஜாய்சாயிருக்குமென்று சொன்னார்கள். அதற்கு எந்த ஆதாரத்தைக்கொண்டு சொல்லுகிறீர்களென்று பாத்துஷா கேட்கவே இமாமவர்கள் "நற்காரியங்கள் செய்வதில் தாமதப்படுத்தக்கூடாதுஎன்று நாயகம்(சல்) அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்'' என்று தலீல்காட்டினார்கள். அரசர் அதையொப்புக்கொண்டார். ஆகையால் இரவுகாலங்களிலும் எல்லாநாள்களிலும் நகங்களை வெட்டுவது ஜாய்சாய் இருக்கும். ஆனால் வெள்ளிக்கிழமை வியாழக்கிழமைகளில் நகங்களைத் தரித்துவருவது மிகவும் சிறந்ததாயிருக்கும். ஏனென்றால் ஒருவன் ஒரு வெள்ளிக்கிழமை நகம் தரிப்பானானால், அவனை அடுத்தவெள்ளிக்

கிழமைவரையில் ஹக்சுப்ஹானஹூவதஆலா எல்லாபலாமுசீபத்துகளைவிட்டும் காப்பாற்றுவானென்று நபிபெருமான் (சல்) அவர்கள் திருவுளமானதாக ஆயிஷா (ரலி) அவர்களைத்தொட்டும் ஒரு ரிவாயத்து வந்திருக்கிறது. இன்னும் "எவனொருவன் வியாழக்கிழமைகள்தோறும் நகங்களைத்தரித்து வருகிறானோ அவனை அல்லாஹூதஆலாமிஸ்கீன் தனத்தைவிட்டும் காப்பாற்றுவானென்று இமாம் நவவி (ரஹ்) அவர்கள் சொல்லியிருப்பதாக "மிஷ்காத்" என்றகிதாபில் எழுதியிருக்கிறார்கள்.

நகங்களை பல்லினால் கடித்துத்தரிப்பது நல்லதல்ல. ஏனென்றால் அவ்விதம் செய்துவருவதால் கெட்டவியாதிகள் உண்டாகுமென்று ஷாஅத்துல் இஸ்லாம் என்றகிதாபில் எழுதப்பட்டிருக்கிறது.

இனி நகத்தைத்தரிப்பது வலதுகைக்கலிமாவிரலைக்கொண்டு துவக்கம்செய்து வலதுகைச்சிறுவிரல் வரையிலும் முடித்துப் பின் இடதுகைச்சிறுவிரல் தொடுத்து இடதுகைப் பெருவிரலில் முடித்துக் கடைசியாக வலதுகைப்பெருவிரலின் நகத்தைத்தரிக்க வேண்டுமென்று சில இமாம்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் சில இமாம்கள் மேற்சொன்ன ஒழுங்கின்படிசெய்வது அவசியமில்லையென்றும் அவ்விதம்செய்யாததால் யாதொரு தண்டனையும் ஏற்படாதென்றும் எழுதியிருக்கிறார்கள்.

இனி தரிக்கப்பட்ட நகங்களைப் பூமியில் புதைத்துவிடுவது சுன்னத்தாயிருக்குமென்று "சிராஜூல்வஹ்ஹாஜ்" என்றகிதாபில் வருகிறது. இன்னும் தரிக்கப்பட்டநகங்களை மலஜலபாதைகளில் போடுவது மக்ரூஹென்றும் அவ்விதம் போடுவதால் கெட்டரோகங்கள் உண்டாவதற்குக்காரணமாயிருக்குமென்றும் "மதாலிபுல் முஃமினீன்" என்றகிதாபில் வருகிறது.

---

5 சாயம் போடுவதன் பயான்.

ஆண்களும் பெண்களும், மார்க்கயுத்தவீரர்களும் அல்லாதவர்களும் தங்கள் முடிகளுக்கு மருந்தோன்றி குங்குமம் முதலிய பூண்டுகளைக்கொண்டு சிகப்பு அல்லது மஞ்சள் சாயம் போடுவது ஜாய்சாய் இருக்குமென்று அபூஹனீபா (ரஹ்) அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் பெண்கள் தங்கள் முடிகளுக்கு மேற்சொன்ன சாயங்களைத்தங்கள் புருஷன்உத்தரவில்லாமல் போடுவது ஹராமாயிருக்குமென்று "அஸ்அத்துல் மஆத்" தென்ற கிதாபில் வருகிறது. இன்னும் ரசூலேஅக்ரம் (சல்) அவர்கள் அன்சாரீன்களின் தாடிமுடி வெள்ளையாயிருப்பதைக்கண்டு "நீங்கள் உங்கள் தாடிகளுக்கு சிகப்பு அல்லது மஞ்சள் சாயம் போட்டுக்கொள்ளுங்கள். ஏனென்றால் எகூதிகள் தங்கள்முடிகளுக்கு சாயம் போடாமல் வெள்ளையாகவே விட்டுவிடுகிறபடியால் அவர்களுக்கு மாறுபாடாகச்செய்வது நல்லதாயிருக்குமென்று திருவுளமானதாக வருகிறது. ஆகையால் மேற்சொன்ன சாயங்கள்போடுவது சுன்னத்தென்று இந்தஹதீதினால் தெரிகிறது

ஆனால் மார்க்க யுத்தவீரர்களைத்தவிர மற்றவர்கள் ரோமங்களுக்குக் கருப்புச்சாயம் போடுவது ஜாய்சல்ல. ஹாமீம்நபி(சல்) அவர்கள்" நீங்கள் உங்கள்ரோமங்களுக்கு சிகப்பு அல்லது மஞ்சள்சாயம் போடுங்கள். ஆனால் கருப்புச்சாயம்போடவேண்டாம்" என்று திருவுளமானதாக" முஸ்லீம்" என்றகிதாபில் வருகிறது. இன்னும்"கடைசிகாலத்தில் சிலகூட்டத்தார்கள்வெளியாவார்கள். அவர்கள் தங்கள் முடிகளுக்குக்கருப்புச்சாயம் போடுவதைப் பிரியம் வைப்பார்கள். அவர்களுக்கு சுவர்க்கத்தின் பரிமளம் கிடைக்கா" தென்று தாஹாநபி (சல்) அவர்கள் திருவுளமானதாக ஒருஹதீது வந்திருக்கிறது. இன்னும் எவனொருவன் தன்ரோமங்களுக்குக்கருப்புச்சாயம் போடுகிறானோ அவனுடையமுகம் கியாமத்து நாளில் கருத்துப்போகுமென்றும் கருப்புச்சாயம் போடு

வ்துகாரகவர்திகளின் அடையாளமாயிருக்குமென்றும் முதன் முதல் கருப்புச்சாயம் போட்டவன் பிர் அவ்ன் என்றும் அவன் நரகவாதியாய்விட்டான்'' என்றும் ரசூலே அக்ரம் (சல்) அவர்கள் திருவுளாயிருக்கிறார்கள். இன்னும் கருப்புச்சாயம் போடுவது பெரும்பாவமென்று "மிஷ்காத்'' "சவாஜிர்'' முதலிய கிதாபுகளில் வருகிறது.

ஹிக்காயத்து. உமர் (ரலி) அவர்களின் கிலாபத்துடைய காலத்தில் ஒருகிழவன் தன் நரைத்த தாடிக்குக்கருப்புச்சாயம் போட்டுத்தான் வாலிபனென்று ஏமாற்றி ஒரு வாலிபப்பெண்ணை நிகாஹ் செய்துகொண்டான். சிறிதுநாளில் அவன் கிழவனென்ற உண்மைதெரிந்து அப்பெண் கலீபா அவர்களிடம் முறையிட கலீபா அவர்கள் அக்கிழவனைக் கூப்பிட்டு விசாரித்து, அப்பெண் சொன்னதுமுற்றிலும் உண்மையே யென்றுகண்டு, நிகாஹைப் பிரித்துவிட்டார்கள் பொதுமஸ் அலாவின்படி, ஒருவன் ஒரு ஷர்த்தின்பேரில் வேறொருவனிடம் ஒருகாரியம் செய்வதாக ஒப்புக்கொண்டானேயானால், அவன் தான் செய்த ஷர்த்தை நிறைவேற்றவிட்டால் மற்றவன் அந்த ஒப்பந்தத்தால் கட்டுப்படமாட்டான். இவ்விடம் அக்கிழவன் தான் வாலிபனென்னும் ஷர்த்தின் பேரில் நிக்காஹ் செய்துகொண்டபடியால் அவன் வயோதிகனாயிருப்பதன் காரணமாக அந்த ஷர்த்து முறிந்துவிட்டது. ஆகையால் நிகாஹைப்பிரிப்பதும் ஜாய்சாய்விட்டது.

இனி ரசூலேகரீம் (சல்) அவர்கள் தங்கள் முபாரக்கான தாடிக்கு எவ்விதச்சாயமும் போடவில்லையென்று ஹதீதுகளிலிருந்து தெரிகிறது. ஏனென்றால் நபி நாயகம் (சல்) அவர்களுக்கு சிற்சில வெள்ளைமுடிகளே இருந்தனவென்று ஹதீதுகளில் தெரிகிறது. இன்னும் அவர்களுடைய வெள்ளைமுடிகள் இருபதென்றும் எழுபதென்றும் எண்பதென்றும் இக்திலாபாய் வந்திருக்கிறது. இன்னும் ரசூலுல்லாஹி (சல்) அவர்கள் தங்கள் தாடிக்கு எண்ணை தேய்த்துக்கொள்வார்களேயானால் அவர்களின் வெள்ளைமுடிகள்

கண்ணுக்குத்தெரியாதென்று சொல்லப்பட்டு வருகிறது. ஆகையால் நாயகம் (சல்) அவர்களுக்கு எவ்விதச்சாயமும் போடவேண்டிய அவசியமே ஏற்படவில்லையென்று இதனுல் தெரிகிறது. ஆனுல் சில ராவிகள் ரசூலேகரீம் (சல்) அவர்கள் மருந்தோன்றிச் சாயம் போட்டார்களென்றும் சிலர் ஒருவிதப்புல்லின் சாயம்போட்டார்களென்றும் சொல்லியிருக்கிருர்கள். இதன் கருத்து என்னவென்ருல்: நபி நாயகம் (சல்) அவர்களின் முபாரக்கானதாடி, இயற்கையாகவே கொஞ்சம் சிகப்புநிறமாயிருந்ததால் அவர்கள் சிகப்புச்சாயம் போட்டார்களென்று சொல்லியிருக்கிருர்கள். இன்னும் அவர்கள் தங்கள் தாடியை ஒருவிதமஞ்சள் நிறமுள்ள புல்லைக்கொண்டு கழுகுவார்களாகையால் கழுகினஉடன் சிறிது மஞ்சள்நிறமாகத்தோன்றினபடியால் சிலர் மஞ்சள் சாயம் போட்டார்களென்று சொல்லியிருக்கிருர்கள். ஆனுல் நபிநாயகம் (சல்) அவர்கள் யாதொரு சாயமும் போடவில்லையென்றே தெரிகிறது.

இனி பெண்கள் தங்கள்கைகளுக்கு மருந்தோன்றி கொண்டு சாயம் போடுவது சுன்னத்தாயிருக்குமென்று "ஷறா அத்துல் இஸ்லாம்" என்றகிதாபில் எழுதப்பட்டிருக்கிறது. (ஹதீது.) நபி நாயகம் (சல்) அவர்களிடம் ஒருநாள் ஒரு பெண்வந்து திரைக்குள் நின்று ஒருகாகிதத்தைக் கொடுத்தாள். றசூல் (சல்) அவர்கள் அந்தக்கடிதத்தை வாங்கவில்லை. ஏனென்ருல் அக்கடிதத்தைக் கொடுத்தது ஆணே, பெண்ணேவென்று தெரியவில்லை யென்றும், பெண்கள் கையில் மருந்தோன்றிச்சாயம் போடுவது சிறந்ததென்றும் நாயகம் (சல்) அவர்கள் திருவுளமானதாக "அபூதாவூது" என்ற கிதாபில் வருகிறது. ஆகையால் பெண்கள் மருந்தோன்றி கொண்டு தங்கள் கைகளுக்குச்சாயம் போடுவது சுன்னத்தென்றும் ஆண்கள் எவ்வித சாயமும் தங்கள் கைகளுக்குப் போடுவது சரியல்ல வென்றும் இதனுல் தெரிகிறது. ஆனுல் பெண்கள் கைகளுக்கு மருந்தோன்றியல்லாத இதர சாயங்கள் போடுவது ஜாய்சல்ல.

இனி பற்களில் எவ்வித சாயம் போடுவதும் ஆண், பெண், யுத்தவீரர் அடங்கலுக்கும்ஜாய்சல்லவென்று "பதாவே இப்ராஹீம் ஷாஹிய்யா" என்றகிதாபில் வருகிறது. தற்காலங்களில் மிகுத மான பெண்கள்தங்கள் பல்களுக்கு தாச்சினு போன்ற பொடி களைத்தேய்த்துவருகிறார்கள் இவ்விதம் நாள்படசெய்துவருவதால் பல்களில் கறையேற்பட்டு விட்டால் ஜனுபத்து முளுக்கு நீங்கா தென்று பிக்ஹு கிதாபுகளிலிருந்து தெரிகிறபடியால் அவ்விதம் தாச்சினுமுதலியவைகளை உபயோகிப்பதை விட்டும் தவிழ்ந்து கொள்ளுவது அவசியமாயிருக்கும்.

---

6. பற்பல மஸ் அலாக்கள்.

தலைரோமம், தாடி, மீசை முதலியரோம சம்பந்தமான விஷ யங்களில் பத்து காரியம் செய்வது மக்ரூஹாயிருக்குமென்று "இஹ்யாவுல் உலூமித்தீன்" என்றகிதாபில் எழுதப்பட்டிருக் கிறது. அவைகளாவன்:

1. நரைத்த தாடிக்குக்கருப்புச்சாயம் போடுவது. அவ்விதம் முதன்முதலாகச் செய்தவன் பிர்அவுன் என்றும் அவன் தன்னை ஆண்டவனென்று சொல்லி வழிகெட்டு நரகவாதியாய் விட்டா னென்றும், இவ்விதம் சாயம்போடுவது நரகவாதிகளின் அடை யாளமாயிருக்குமென்றும் நபிபெருமான் (சல்) அவர்கள் திருவுள மானதாக வருகிறது இன்னும் வயோதிகர்களில் எவனொருவன் கருப்புச்சாயம் போட்டுக்கொள்ளுகிறானோ அவனைவிடக்கெட் டவன் வேறொருவனுமில்லை யென்று மற்றோர் ரிவாயத்து வருகி றது. ஆனால் மார்க்கயுத்த வீரர்கள் யுத்தத்துக்குப்போகும் போது கருப்புச்சாயம் போட்டுக்கொள்ளலாம். அவர்களும் யுத் தகாலத்தைத்தவிர மற்ற காலங்களில் கருப்புச்சாயம் போடுவது சரியல்லவென்று தெரிகிறது.

2. ஒருவன், தான் பெரியவனென்றும் அதிகவயதானவனென்றும் மிகவும் மதிப்புள்ளவனென்றும் பிறர் தன்னை யெண்ணிக்கொள்ளும் பொருட்டுதன் கருப்பு முடிகளுக்கு வெள்ளைச்சாயம் போடுவது.

3. தாடி முடிகளைப்பிடுங்குவது. சிற்சில ஜனங்கள் தங்களைப்பிறர் தாடிமுளைக்காத வாலிபரென்று எண்ணிக்கொள்ளவேண்டும் என்று நாடிச்செய்யும் காரியமாயிருக்கும். ஆண்பிள்ளைகளை யழகாக்கிவைப்பது தாடி யென்று ரிவாயத்துகளிலிருந்து தெரிகிறது. ரசூலே அக்ரம் (சல்) அவர்கள் மிஃராஜுக்குப்போயிருந்த பொழுது ஒருகூட்டம் மலாயிக்கத்துக்கள் "சுப்ஹானல்லதீ ஸய்யினர் ரிஜாலபில்லிஹிய்யிவன்னிஸா அபித்தவாயிப்" (ஆண்களுக்கு தாடியைக்கொண்டும் பெண்களைத்தலை முடியைக்கொண்டும் அழகாக்கிவைத்தானே அந்த நாயனுக்கே சகல புகழும்துதியும்) என்று தஸ்பீஹ் செய்தவர்களாயிருந்தார்களென்று சொல்லப்பட்டு வருகிறது. ஆகையால் தாடி முடியைப்பிடுங்குவது மக்ரூஹாயிருக்கும். ஆனால் பெண்களுக்கு முகத்தில் முடிமுளைத்திருந்தால் அதைப்பிடுங்குவது ஜாய்சாயிருக்கும்.

4. தாடி, தலை, மீசை முதலியவிடங்களிலுள்ள வெள்ளை முடிகளைப்பிடுங்குவது. ரசூல்ல கரீம் (சல்) அவர்கள் "நீங்கள் உங்கள வெள்ளை முடிகளைப் பிடுங்காதீர்கள். அவைகள் முஸ்லீமான ஜனங்களின் ஒளிவாயிருக்கும். ஹக்சுப்ஹான ஹுவத ஆலா ஒவ்வொரு வெள்ளைமுடிக்கும் ஒரு நன்மை கொடுப்பான்" என்று திருவுளமானதாக உமர் இப்னு சுகைபு (ரலி) அவர்களைத்தொட்டும் ஒரு ரிவாயத்து வருகிறது. இன்னும் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் விருத்தாப்பிய காலத்தில் தங்கள் கருப்பு முடிகள் வெள்ளையாக மாறுவதைக்கண்டு ஹக் சுப்ஹான ஹுவதஆலாவிடம் அதன் காரணத்தைப்பற்றிக் கேட்டார்கள். அப்போது "நீர் பார்க்கும் படியான வெள்ளை முடிகள் உம்முடைய மேன்மையையும் சிறப்பையும் மதிப்பையும் அறிவிப்பதாயிருக்கு"மென்று ஆண்டவனிடமிருந்து பதில்கிடைத்தது. நபியவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டு வெள்ளை முடிகளை யதிகமாக்

கும்படிதுஆச்செய்தார்கள். ஆகையால் வெள்ளை முடிகள் சிறப்பின் அறிகுறியாயிருப்பதால் அதைப்பிடுங்குவது நல்லதல்ல.

5. தாடி முடியைக்கையால் ஒரு பிடிக்குக்கம்மியாகும்படிவெட்டுவது. சர்வரே காயினைத் (சல்)அவர்களும் சஹாபாக்களும் தாடியை கைப்பிடியால் ஒருபிடிக்கு அதிகமாகவே வளர்த்து வந்திருக்கிறார்களாகையால் அதற்கு விரோதமாகச்செய்வது மக்ரூஹாயிருக்கும்.

6. தலைமுடியை ஆண்கள் தோளுக்குக்கீழ் தொங்கும்படியாக வளர்ப்பதும் சுல்பா முடிவைப்பதும் மக்ரூஹாயிருக்கும்.

7. தலைமுடியை நபிநாயகம் (சல்) அவர்களின் சுன்னத்தை நாடாமல்வீண்பெருமை அல்லது அழகையுத்தேசித்து அலங்கரித்தல்.

8. ஒருவன் தன்னை மேதாவி அல்லது மஸ்தான் என்று பிறர்எண்ணிக்கொள்ளும்பொருட்டு தலைமுடி,தாடிகளுக்கு எண்ணை தடவிச்சீவாமல் விட்டுவிடுவது.

9. தாடியை ஒருபக்கம் அதிகமாகவும் ஒருபக்கம்குறைவாகவுமிருக்கும்படி வளர்த்துவது.

10. ஒருவன் தன்னை சாலிஹானவன் என்றுபிறர் எண்ணிக்கொள்ளும் பொருட்டு தாடிக்கு சிகப்புச்சாயம் போடுவது.

“மத்தாலிபுல் முஃமினீன்” என்றகிதாபில் இன்னுமொரு கருமத்தையும் மக்ரூஹென்று எழுதியிருக்கிறார்கள். அதாவது: கண்ணுக்கும் காதுக்கும் இடையிலுள்ள உயரமான எலும்பின் மேல் நுனிக்கு மேல் ஏற்றிதாடிவைப்பதாயிருக்கும். இவ்விதம் செய்வது தலைரோமத்தில் சிலதையும் தாடியுடன் சேர்த்துவதாகிறது “தாடியை ஹத்துக்கு மேல் ஏற்றிவைப்பவர்களை நான் வெறுக்கிறேன்” என்று நபி நாயகம் (சல்) அவர்கள் திருவுளமானதாக வருகிறபடியால் அதைவிட்டும் தவிழ்ந்து கொள்ளுவது அவசியமாயிருக்கும்.

இனி முடி விஷயத்தில் சிற்சில கருமங்கள் செய்து வருவது நபிமார்களிடத்தில் பூர்வாங்கமான சுன்னத்தாயிருக்குமென்று நபி நாயகம் (சல்)அவர்கள் திருவுளமானதாக;ஆயிஷா (ரலி)அவர்

களைத்தொட்டும் ஒருரிவாயத்து வந்திருக்கிறது. அவைகளாவன: 1. உதட்டுமுடிகளை வெட்டுவது (2) தாடிவளர்ப்பது. (3) நகங்களைத்தரிப்பது (4) அக்குளிலுள்ளமுடிகளை நீக்குவது. (5) தொப்புளுக்குக்கீழுள்ள ரோமங்களை நீக்குவது. இவைகளடங்கலும் நபிமார்களின் சுன்னத்தாகையால் அவைகளை யெடுத்து நடப்பதால் ஒருவன் கணக்கில்லாத நன்மைகளையடைவானென்பதில் சந்தேகமில்லை

இனி முளுக்கு என்னும் பெருந்துடக்குள்ளவர்கள் க்ஷவரம் செய்வதும் நகங்களைத்தரிப்பதும் மக்ரூஹாயிருக்குமென்று "மத்தாலிபுல் முஃமினீன்" என்றகிதாபில் வருகிறது. ஏனென்றால் ஒருவன் அவ்விதம் செய்தால், கியாமத்து நாளில் அவ்விதம் நீக்கப்பட்டரோமங்களும் நகங்களும் பசியுள்ள ஒட்டகங்களைப்போல் வந்து "நாயனே! பெருந்துடக்காயிருக்கும்போது இவன் என்னெங்களை நீக்கினனென்றுகேட்டருள்" என்று விண்ணப்பம் செய்யுமென்று சர்வலோகநாயினுத் (சல்) அவர்கள் திருவுளமானதாக வருகிறது.

இனி ஒலூசெய்தபின் ஒருவன் க்ஷவரம் செய்துகொண்டாலும் அல்லது நகத்தைத்தரித்தாலும் அவன் மறுபடியும் ஒலூ செய்யவேண்டிய அவசியமில்லை. ஆனால் நகங்கள் தன் விரலின் நுனிகளைவிட அதிகமாக நீண்டிருந்து தரித்துக் கொள்வானேயானால் விரல்களைமாத்திரம் கழுகிக்கொள்வது நலமாயிருக்கும்.

ஒருவன் முசீபத்துடைய காலத்திலாவது யாராவது மவுத்தான காலத்திலாவது தலைமுடி, தாடி வகையறாக்களைச்சிறைப்பது ஜாய்சல்ல. இவ்விதம் செய்வதை றசூல் (சல்) அவர்கள் வெறுக்கிறார்களென்று 'ஷாஹறூல் மஸாபீஹ்" என்றகிதாபில் எழுதப்பட்டிருக்கிறது.

இனி குழந்தைகள் பிறந்து நாற்பது நாள்களுக்குப்பின் அவர்களின் தலைமுடிகளைச்சிறைத்து அதன் இடைபொன்னாவது வெள்ளியாவது சதக்காக்கொடுப்பது சுன்னத்தாயிருக்குமென்று "மிஷ்காத்" என்றகிதாபில் ஒரு ஹதீது வருகிறது. மேற்சொன்ன முடிகளை புதைப்பது மிகவும் சிறந்தாயிருக்கும்.

சர்வரே கர்யினுத் (சல்) அவர்களின் திருமுடிகளை பாக்கத் துக்காக வைத்திருப்பதால் கணக்கற்ற நன்மைகளும் சிறப்பும், வெற்றியும் கலாசியத்தும் உண்டாகும். கா்லிது இப்னு வலீத் (ரலி) அவர்கள் நாயகம் (சல்) அவர்களின் திருரோமங்களிலொன்றை வைத்துக்கொண்டு யுத்தத்துக்குப்போனதில் தனக்குவெற்றி கிடைத்ததென்று சொல்லுகிறுர்கள். உம்முசல்மா (ரலி) அவர்கள் தாஹா நபி (சல்) அவர்களின் சில திருரோமங்களை ஒருடப்பியில் வைத்துக்கொண்டு வியாதியஸ்தர்களுக்கு அந்த ரோமங்களைக்கழுகின தண்ணீரைக்கொடுப்பதால் சௌக்யப்பட்டு வந்ததென்று "புகாரி" என்ற கிதாபில் வருகிறது. ஆகையால் இவ்வளவு சிறப்புப்பொருந்திய ரோமங்களை வெட்ட நபிநாயகம் (சல்) அவர்கள் நாடுவார்களேயாளுல் சஹாபாக்கள் கூட்டமாகச் சூழ்ந்து அவைகளை பூமியில் விழாதபடி தாங்கியெடுத்துக் கொண்டு தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வார்களென்று அனஸ் (ரலி) அவர்களைத்தொட்டும் ஒரு ரிவாயத்துவருகிறது.

தற்காலத்தில் சிற்சில விடங்களில் றசூல் (சல்) அவர்களின் திருரோமங்களிருப்பதாகச் சொல்லப்பட்டுவருகிறது. அவைகள் உண்மையானவையென்றும் அல்லவென்றும் உலமாக்களுக்குள் வீண்தர்க்கம் ஏற்பட்டுவருகிறது. பஸாது, பித்அக்கள் நிறைந்த இக்காலத்தில் வீண் தர்க்கங்கள் செய்யாமலிருப்பதே சிறந்ததென்று தெரிகிறது. ஏனென்றால் நாம் அம்முடிகள் உண்மையானவையல்லவென்று சொல்ல, வாஸ்தவத்தில் அவைகள் உண்மையானவைகளாயிருந்தால், நாம் ஒரு பெரும் அதிர்ஷ்டத்தையிழந்தவர்களாகிறோம். அவ்வாறன்றி நாம் உண்மையென்றுசொல்ல, அவைகள் சரியான முடிகளல்லாமலிருந்தால் அதனுல் நமக்கு யாதொருதோஷமுமில்லை. ஆகையால் வீண் தர்க்கம் செய்யாமலிருப்பதே நல்லது.

ஆண்டவன் ஹக்சுப்ஹான ஹூவதஆலா நம்மனைவரையும் ரசூலே கரீம் (சல்) அவர்களின் சுன்னத்துகளையெடுத்து நடக்கும் கூட்டத்திலாக்கிவைத்து, முஷ்ரிகீன் முதலிய காபிர்களின் பழக்கவழக்கத்தை விட்டும் காப்பாற்றி நற்பதவியைத்தந்தருளுவானுகவும். வஸல்லல்ல ஹூதஆலா வசல்லம அலா கயிரிகல்கிஹீசெய்யதினுமுஹம்மதின் வஅலா ஆலிஹி வஸஹ்பிஹீ ...வல்ஹம்து லில்லாஹி ரப்பில்ஆலமீன்

ஆமீன்

முற்றிற்று

ரபீகேசபர் என்னும் பிரயாணநேசன்.

இஃது ரயில்வே பிரயாணத்தில் அவசியமான விஷயங்களுக்கு ஹனபிமத்ஹபின்படி பற்பல மஸ்அலாக்கள் பொதிந்துள்ளது ஒவ்வொரு முஸ்லீமானவர்களுக்கும் அவசியமான ஒரு சிறுபுஸ்தகமாயிருக்கும் விலை அணா 2.

அஹ்காமுத்தஹ்லீக் விலை அணா 4.

வேண்டுவோர் அடியில்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பி. என். செய்யத் அலி நூரி சாஹிப்,
மதரஸா, கோட்டை
கோயமுத்தூர்.